விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 256 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 15 சனிக்கிழமை (31.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



## இந்திய பாதுகாப்பு ஆலோசகர் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு

### சமகால அரசியல் நிலைவரங்கள் பொருளாதாரம் தொடர்பில் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. 15

### ஜே.வி.பி ஆட்சியில்

## புதிய கல்வி முறைமை ஸ்தாபிக்கப்படும்

### – அநுர குமார திஸாநாயக்க



(பொலநறுவை)

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் புதிய கல்வி முறைமை ஸ்தாபிக்கப்படும் என அதன் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். 15

### சர்வதேச காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு

# வடக்குக் கிழக்கில் உறவுகள் கவனயீர்ப்பு



(திருகோணமலை)

சர்வதேச காணாமலாக்கப்பட்டவர்களின் தினமான நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(02ஆம் பக்கம் பார்க்க)

### ஊழல், மோசடியை

## தமது ஆட்சியில் ஒழிக்க நடவடிக்கை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

ஊழல், மோசடி செயற்பாடுகளை முற்றாக ஒழிக்க தமது ஆட்சியின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் 15

### வட்டுக்கோட்டையில்

## இரத்த வாந்தியெடுத்த பொலிஸ் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் இரத்த வாந்தி எடுத்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வட்டுக்கோட்டை பாரதிபுரத்தைச் 02

### வவுனியா - மன்னார் வீதியில்

## கூலர் ரக வாகனம் மோ.சைக்கிள் விபத்து

### யாழ்.இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் யாழ்.இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் 15

## அன்புக்குரியவர்களுக்கு நடந்ததை அறிய உறவுகள் காத்திருக்கிறார்கள்

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

(கொழும்பு)

"இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதேவேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று சர்வதேச 15

## தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு

### தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை தீர்மானம்

(கிளிநொச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதென்ற தீர்மானம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி - கிளிநொச்சி மாவட்டக் கிளையின் 15

## தேர்தல் துண்டுப் பிரசுரங்களை வீடு வீடாகக் கொடுக்கத் தடை

(கொழும்பு)

தேர்தல் துண்டுப் பிரசுரங்களை வீடு வீடாக விநியோகிப்பதற்காக ஊர்வலங்கள் அல்லது ஊர் 02

### மீற்றர் வட்டிக் கொடுமை

## விபரீத முடிவெடுத்த இளம் குடும்பப் பெண் மரணம்

### ஆறுகால்மடத்தில் சம்பவம்


(கரணவாய்)

மீற்றர் வட்டிக்காரரின் கொடுமை தாங்க முடியாமல் மூன்று மாதப் பெண் குழந்தையின் தாயார் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்த சம்பவம் ஆறுகால்மடம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரம

## மோகனதாஸ் சுவாமிகளுக்கு இன்று அகவை எழுபத்தைந்து



நாடளாவிய ரீதியில் இன, மத பாகுபாடுகளைக் கடந்து பல சமய, சமூகப்பணிகளினை ஆற்றிவரும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதல்வர் கலாநிதி செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகள் இன்று சனிக்கிழமை பவளவிழாக் காண்கிறார்.

இதனையொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலைப் பண்பாட்டுப் பேரவையினரும் முருக பக்தர்களும் இணைந்து தயாரித்த "அறம் பாலிக்கும் ஞான மோகனம்" என்ற நூலின் வெளியீடு இன்று காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ம-7)

### வடக்கு...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் வடக்குக் கிழக்கு மாகாண உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் மற்றும் பேரணிகள் இடம்பெற்றன.

இதற்கமைய, யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான பேரணி காங்கேசன்துறை வீதி ஊடாக முனியப்பர் கோவிலடி வரை முன்னெடுக்கப்பட்டிருந்தன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதற்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி இந்தப் பேரணி இடம்பெற்றது.

பேரணியில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, சர்வதேச காணாமலாக்கப்பட்டவர்களின் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

அதேநேரம், திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் போது பொலிஸாருக்கும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (ம-7)


# மரண அறிவித்தல்



தோற்றம் 28 - 02 - 1964

மறைவு 29 - 08 - 2024

## திருமதி சிவகுமாரன் தியாகவதி

(ஓய்வு பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் – வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுமாரன் தியாகவதி அவர்கள் 29.08.2024 அன்று இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகையா - பேரின்பவதி தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை - கனகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் வேலாயுதபிள்ளை சிவகுமாரன்(ஓய்வு பெற்ற சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும் தியாகசீலன்(லண்டன்) அவரது பாசமிகு சகோதரியும் சிவானிஜா(ஆசிரியை, இந்துக் கல்லூரி, கொழும்பு 04), சிவானுஜன்(உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), பவானுஜன் (மாணவன், கொழும்புப் பல்கலைக்கழகம்), சிவகஜேந்திரன் (மாணவன், பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான செட்டியார், சின்னத்துரை, தம்பிஐயா, சங்கரப்பிள்ளை, மனோன்மணி ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம், அருணாசலம் ஆகியோரின் மருமகளும் அனுஷா(லண்டன்), தூயகுமாரன்(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) காலஞ்சென்ற யோகமலர் மற்றும் மல்லிகாமலர்(லண்டன்), புனிதமலர்(லண்டன்), சந்திரமலர்(லண்டன்), குசலகுமாரன்(லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ஹேமநந்தினி(ஆசிரியை, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), நவரட்ணம், புவனேஸ்வரன்(லண்டன்), கெங்காதரன்(லண்டன்), ஞானசீலன் (லண்டன்), விமலினி(லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் கிருஷன்(லண்டன்), அபிஷா(லண்டன்), திபிஷா(லண்டன்), பபிஸ்ரா, பிறேமானந்த், பானுப்பிரியா(ஜேர்மனி), பானுஜன்(லண்டன்), அனுஜன் (லண்டன்), லக்ஷிகா(லண்டன்), நந்துஷன்(லண்டன்), பிறின்ஸ்ஜா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் டொறின் ரேணுகா, டினேஸ்காந்த், பேணாட் றிஷாந்(லண்டன்), போல் கஜேந்திரன்(மாணவன் பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), த்ரிஷா(லண்டன்), ரேத்சின்(லண்டன்) ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.09.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(1826)


நல்லூர் ஆலய விசேட தினங்களில்

# கோவில் வீதியை ஒருவழிப் பாதையாக்குக

## யாழ். அரச அதிபர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலயத்தின் விசேட திருவிழாக்களான சப்பறம், தேர், தீர்த்தம், திருக்கல்யாணம் ஆகிய திருவிழாக்களின் போது நல்லூர் கோயில் வீதியை பருத்தித்துறை வீதியிலிருந்து கைலாசப்பிள்ளையார் கோவில் வரை ஒரு வழிப்பாதையாக ஆக்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் யாழ்.மாநகர சபை ஆணையாளருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

நல்லூர் ஆலயத்தின் விசேட திருவிழாக்களின் போது அனர்த்தங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை யாழ். மாவட்ட செயலகத்திடம் யாழ்.மாநகரசபை கேட்டதன் பேரில் மேற்படி கடிதம் யாழ்.அரச அதிபரால் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


அந்தக் கடிதத்தில்,

கோயில் வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து கைலாசப் பிள்ளையார் கோயில் வரை உள்ள கோவில் வீதியினை கோவிலிலிருந்து மக்கள் வெளிச்செல்லுகின்ற ஒருவழிப் பாதையாக மட்டும் பயன்படுத்துதல். இவ்வாறு நடைமுறைப் படுத்துவதன் மூலம் அவசர வெளியேற்று பாதையாக மேற்படி பாதையினை பயன்படுத்த முடியும்.

இதனால் அவசர தேவை கருதி வெளியேற்றப்பட வேண்டியவர்களை வெளியேற்றுவது இலகுவானதாக காணப்படும். மேலும் மேற்படி விடயத்தினை முற்கூட்டியே தகவல் தொடர்பு சாதனங்கள், பத்திரிகைகள், பொதுமக்களுக்கு அறிவுறுத்தலை வழங்குதல் ஊடாக பொது மக்களுக்கு அறிவுறுத்தலை வழங்குதல்.

மேற்படி நடைமுறைகளை விசேட திருவிழாக்களான சப்பறம், தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்களின் போது நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஆலயச் சூழலில் அனர்த்தம் ஏற்படுவதனைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நல்லூர் கந்தசுவாமி கோவில் ஒருமுகத் திருவிழா



படங்கள்: சிவசாந்தன்

### விபரீத...

இதில் அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான கஜந்தன் ஜெகதீசா (வயது-28) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த இளம் குடும்பப் பெண் மீற்றர் வட்டிக்கு பணம் பெற்று கடை நடத்தியுள்ளார். கடை நஷ்டமடைந்ததால் பெற்ற கடனை திருப்பி செலுத்த முடியாமல் இருந்துள்ளார்.

மீற்றர் வட்டிக்காரர் ஏச்சு மற்றும் தகாத வார்த்தைப் பிரயோகத்தால் மன அழுத்தம் ஏற்பட்டு அவர் விபரீத முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

### இரத்த...

சேர்ந்த பெரியசாமி திவாகரன் (வயது-40) என்ற ஒரு குழந்தையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் காலை இரத்த வாந்தி எடுத்த நிலையில் சிகிச்சைக்காக மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழநதுள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7)

### தேர்தல்...

வலங்களில் மக்கள் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் போது இசைக்கருவிகள் மற்றும் காட்சிப் பலகைகளை பயன்படுத்தக் கூடாது எனவும் தேர்தல் காலத்தில் அரசியல் செய்திகள் மற்றும் கட்டுரைகள், விளம்பரங்கள் போன்றவற்றை அரசு அல்லது அரச நிறுவனங்களின் செலவில் வெளியிடக் கூடாது எனவும் அனைத்துக் கட்சிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7)


# மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 315 6470

(C-1084)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு
- நாட்டு மக்களுக்கு நிவாரணம்
- எதிர் காலத்தில் கடன் வசதி
- விவசாய நவீன மயமாக்கல் திட்டம்
- 20 லட்சம் பேருக்கு காணி உறுதி



# கடன் சுமையற்ற, அபிவிருத்தி அடைந்த நாட்டை கட்டியெழுப்புவதே என் இலக்கு

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

**எதிர்வரும் 5 வருடங்களில் நாட்டுக்காக என்னால் இயன்றதைச் செய்து இளைஞர்களுக்காகக் கடன் சுமை யற்ற அபிவிருத்தி அடைந்த நாட்டை கட்டியெழுப்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.**

"ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வாழ்க்கைச் சுமையைக் குறைத்தல், தொழில் வாய்ப்புகளை வழங்குதல், வரி நிவாரணம் வழங்குதல், பொருளாதார மேம்பாடு, உறுமய மற்றும் அஸ்வெசும் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தி ஒவ்வொரு பிரஜைக்கும் காணி அல்லது வீட்டு உரிமை பெறும் வேலைத் திட்டம் என்பன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனம், மகா சங்கத்தினர் உட்பட மதத்தலைவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், இளைஞர்களுக்கும் கையளிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,"ஜனாதிபதித் தேர்தலுக்கான எனது கொள்கைப் பிரகடனம் நாட்டின் மீட்சிக்காக செயற்படுத்த வேண்டிய துரித வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாகவே அமைந்திருக்கிறது.

உறுமய திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதி. குறைந்த வருமானம் பெறும் 2 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு உரிமைகள், எதிர்காலத்தில் சலுகை அடிப்படையில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீட்டுக் கடன்களையும் வழங்குவோம் மத்திய தரத்தினருக்கும் கடன்களை வழங்குவோம்.

முதலில் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க வேண்டும். அதற்காக ரூபாயின் பெறுமதியைப் பலப்படுத்த வேண்டியுள்ளது.

அடுத்ததாக தொழில்வாய்ப்புக்கள் உருவாக்குவோம். வரிச் சலுகைகளை வழங்குவோம். அடுத்தபடியாக பொருளாதாரத்தை மேம்படுத்துவோம். அதனால் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதே இலக்காக உள்ளது. பின்னர் "உறுமய", "அஸ்வெசும" திட்டங்களை செயற்படுத்துவோம்.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை துரிதமாக செயற்படுத்தலாம். சுற்றுலாத் துறையில் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பணிகளை ஆரம்பித்துள்ளோம். உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். தொழிற்சாலை அபிவிருத்தி வர்த்தக வலயங்களை ஸ்தாபிக்கும் பணிகளை வடக்கிலும் ஹம்பாந்தோட்டையிலும் ஆரம்பிக்க தயாராக இருக்கிறோம்.

அதேபோல் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியைப் பொருளாதாரத்தின் முக்கிய பங்காக இணைக்கப் போகிறோம். அடுத்ததாக டிஜிற்றல் மயமாக்கலுக்கான பணிகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களை இளையோருக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டியுள்ளது.

நான்கு வருடங்களாக எந்த தொழில் வாய்ப்புக்களையும் வழங்க முடியாமற்போனது. நாம் முன்னேறும் போது தொழில் வாய்ப்புக்கள் உருவாகும். அதன் கீழ் ஸ்மார்ட் விவசாயம் செய்வதற்கான நிதி உதவிகளை வழங்க எதிர்பார்க்கிறோம். சுற்றுலாத் துறையிலும் இவ்வாறான தொழில்களை வழங்குவோம். அரசாங்கத்தின் கீழ் உள்ள தொழில்களுக்கும் உள்வாங்க எதிர்பார்க்கிறோம்.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு தொழில் கல்வி பயில்வதற்கான வவுச்சர் ஒன்றை வழங்க எதிர்பார்க்கிறோம். தனியாரின் கீழ் செய்வதா அரசாங்கத்தின் கீழ் செய்வதா என்பதை தீர்மானிக்க அவர்களுக்கு உரிமை உள்ளது. அதனால் தொழிற் பயிற்சி நிலையங்கள் அனைத்தையும் ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவோம். அதேபோல் அனைவருக்கும் ஆங்கிலக் கல்வி என்ற திட்டமும் செயற்படுத்தப்படும்.

பாராளுமன்ற செயற்குழுக்களை அமைத்து சபாநாயகரின் கீழ் அவற்றை வழிநடத்துவோரை தெரிவு செய்வோம்.

தொழிற்சங்கத்தினர், சட்டத் தொழில் செய்வோர், வர்த்தகத் துறை சார்பில் ஒருவர் என்ற அடிப்படையில் அந்தக் குழுக்களை வழிநடத்துவோரைத் தெரிவு செய்வோம். பெண்களை வலுவூட்டும் சட்டம் நிறைவேறியுள்ளது. அரச ஊழியர்கள் புதிய பாடங்களை கற்பதற்கு ஒரு வருட விடுமுறை வழங்குவோம். அரச கொள்கை மற்றும் முகாமைத்துவ பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்போம். இவ்வாறு துரிதமாக செய்யக்கூடிய பல திட்டங்கள் பற்றி சிந்திக்கிறோம்.

2048 ஆம் ஆண்டு வரையில் தூர நோக்கு சிந்தனையுடன் பார்த்து செயற்படுகிறோம். அதனைச் செய்ய முடியும் என்று சொல்பவர்களுடனேயே நாம் பயணிக்கிறோம். அதனால் செப்ரெம்பர் 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களியுங்கள் அடுத்த நாள் முதல் அடுத்த கட்டப் பணிகளை நாம் ஆரம்பிப்போம்." என்று ஜனாதிபதி உறுதியளித்தார். (நி-6)


ஈர விழிகளுடன் 12 ஆம் ஆண்டில்



யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்.சின்னத்தம்பி செல்லத்துறை

(சாத்திரியார்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் - அப்பா
ஆண்டு பன்னிரண்டு ஆனாலும்
உம் நினைவுகள் அழியவில்லை - அப்பா
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் எம்முடன் இருப்பீர்கள் - அப்பா

வையத்துள் 12.07.1943
தெய்வத்துள் 13.09.2012

திதி: ஆவணி திரியோதசி தேய்பிறை

(31.09.2024)

(1063)

இல.45/2,
சாத்திரியார் கோட்டம்,
விசுவமடு.

பாசமுடன்
குடும்பத்தினர்


# பதில்களை அறிவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உண்டு

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்

(கொழும்பு)

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களுக்குரிய பதில்களை அறிந்து கொள்வதற்கும், பொறுப்புக் கூறலைப் பெறுவதற்குமான உரித்தைக் கொண்டிருக்கிறார்கள் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனை முன்னிட்டு தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளப் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தாம் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் உண்மையையும் நீதியையும் கோரும் சமூகங்களுடன் உடன்நிற்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

அதுமாத்திரமன்றி தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறியாமல் இருப்பதன் சுமை மிக அழுத்தமானது எனக் கவலை வெளியிட்டிருக்கும் அவர், இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களுக்குரிய பதில்களை அறிந்துகொள்வதற்கும், பொறுப்புக்கூறலைப் பெறுவதற்குமான உரித்தைக் கொண்டிருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார். (ம-7)

# சிற்பனை முருகனுக்கு இன்று கொடியேற்றம்


(வேலணை)


வேலணை மேற்கு அருள்மிகு சிற்பனை முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் மகோற்சவந்தனில் எதிர்வரும் செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் தரவரிசை பட்டியலில் அஸ்வின் ஜடேஜா ஆதிக்கம்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை ஐசிசி நேற்று முன்தினம் வெளியிட்டது.

பட்ஸ்மேன்கள், பந்து வீச்சாளர்கள், ஓல்ரவுண்டர்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், பந்து வீச்சாளர்கள் பட்டியலில் தமிழக வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் 870 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். இவரைத் தொடர்ந்து 847 புள்ளிகளுடன் ஜோஷ் ஹேசில்வுட் 2ஆவது இடத்திலும், மற் றொரு இந்திய வீரர் பும்ரா 847 புள்ளிகளுடன் ஹேசில் உட்டுடன் இரண்டாவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.

இதே போன்று டெஸ்ட் போட்டிகளில் சிறந்த ஓல் ரவுண்டர்கள் பட்டியலில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா 444 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், மற்றொரு இந்திய வீரர் அஸ்வின் 322 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

இந்த வரிசையில் அக்சர் படேல் 6ஆவது இடத்தில் நீடிக்கிறார். பட்ஸ்மேன்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய வீரர்கள் முறையே ரோகித் ஷர்மா 751 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்திலும், ஜெய்ஷ்வால் 740 புள்ளிகளுடன் 7ஆவது இடத்திலும், விராட் கோலி 737 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர். இந்த பட்டியலில் 881 புள்ளிகளுடன் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் முதல் இடத்தில் நீடிக்கிறார். (நி-6)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 220 | 200-250 | 280 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150 | 150 | 250 |
| தக்காளி | 250 | 300 | 250 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 180 | 200-240 | 200 |
| கோவா | 200 | 320 | 250 | 400 | 300 |
| கரட் | 300 | 300 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 70 | 120 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 200-250 | 240 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 250 | 230 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 70 | 100 | 100 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 150 | 250 |
| பயற்றங்காய் | 150 | 150 | 120 | 200-250 | 150 |
| லீக்ஸ் | 300 | 350 | 500 | 380 | 350 |
| பீற்றூட் | 100 | 140 | 150 | 150 | 150 |
| கறிமிளகாய் | 350 | 700 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 100 | 100-150 | 250 |
| போஞ்சி | 300 | 550 | 600 | 450 | 650 |
| கத்தரி தம்புள்ள | 150 | 140 | 250 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 120 | 150 | 50 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 | 300-350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 140 | 80-110 | 330 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 620 | 800 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 300 | -- | 320 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 50 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3210

Search for people, places and things

### மிதுளா




### துஷாரா




### தினேஷ்




### அஷ்வினி




### அகல்யா




### சனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூரான் திருவிழவை நான் கண்டு கொண்டேனே !

- கம்பவாரிதி இ. ஜெயராஜ்

## சப்பரம்

எப்புரமும் நிறைந்தேதான் விண்ணைத்தொட்டு
இதயமெலாம் ஈர்க்கின்ற அழகு பொங்கும்
சப்பரத்தைக் காணாதார் பிறவி என்னும்
சகதியிலே பலகாலம் உழன்று நிற்பர்
எப்படித்தான் இது வீதி தன்னைத்தாண்டி
இருப்பிடத்தைச் சேரும் என மாதரெல்லாம்
வெப்பமொடு மூச்சிறைத்து விதிர்க்கும் காட்சி
வேறெங்கும் உளதாமோ? வேலர்க்கன்றி.


**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விசேட பேருந்து சேவைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர், தீர்த்த உற்சவத்தினை முன்னிட்டு தீவுப்பகுதியில் இருந்து செயலாற்றும் பேருந்துகள், இ.போ.ச. (வடக்கு) சகல பாதைகளிலும் செயலாற்றும் பேருந்துகள் மற்றும் யாழ்.சாலையின் பேருந்துகள் யாவும் புறப்படும் இடங்களில் இருந்து நல்லூர் ஆலயம் வரை செயலாற்றும் திகதி தேர்- 01.09.2024, தீர்த்தம்- 02.09.2024 என இ.போ.ச (வட) யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# நல்லூரான் திருவடிக்கு... இன்று 23 ஆம் நாள் திருவிழா




## நல்லைக் கந்தவேளே!

நீர்க்குமிழி வாழ்க்கையில் மூழ்கியே யாழ்ந்திடில்
நிலைக்காது எந்தசுகமும்
சீர்மேவும் மனமொன்றிச் சிங்கார வேலவனை
சிந்திக்க மலருமகமும் .
ஆரெம்மை யணைப்பார்கள் அவனின்றி வேறில்லை
அறிந்தவர் அறிவார்களே!
ஆர்த்தெழும் பிறவியை அறுத்தெம்மை யாள்பவன்
அருநல்லைக் கந்தவேளே!

**கலாபூஷணம், சந்தக்கவிஞர், நவ.பாலகோபால்.**

# பவளவிழா வாழ்த்துகள்



கலாநிதி

## செ.மோகனதாஸ்

சுவாமிகள்

அவர்களை இன்று
31.08.2024 பவளவிழாக் காணும்
நன்னாளில் நீடூழி காலம்
வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(சி-1083)

வாழ்த்துவோர்- **ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
யா/ ஆனைக்கோட்டை அ. மி.த.க பாடசாலை

## சப்பை ரதத்தில் முருகன் வருகிறான்

பார்க்கும் இடமெல்லாம் குகனாலயம்
பாடும் புலவோர்க்குச் சரணாலயம்
காக்கும் கரத்திலுண்டு வேலாயுதம்
கையோடு பெறலாமே வளமாயிரம்

மாயையின் புதல்வர்களுக்கு காலன்- அன்னை
பராசக்தி தந்த வடிவேலன்
ஊமையைப் பேச வைத்த ஈசன்
ஓதும் திருச் செந்தூர் வாசன்

சிவனும் உணராத சேதி- அதனை
தெளிய வைத்தான் செவியில் ஓதி
பிறவிக்கடல் கடக்கத் தோணி- அவன்
சப்பை ரதத்தில் வருகின்றான் பார் நீ!

**புலவர் செ.பரமநாதன்**
**தாவடி கிழக்கு.**

# இராசிபலன்

31.08. 2024
ஆவணி 15, சனிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 5.18 மணிவரை

பூசம் முன்னிரவு 10.16 மணிவரை
சுபநேரம் -3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

சனிப்பிரதோசம்
சந்திராஷ்டமம் -
அனுசம், கேட்டை.

**வளவன்**

**மேஷம்**: பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள்

**ரிஷபம்**: தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**மிதுனம்**: குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், பணப் புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்**: கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்**: உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி**: உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செல்வ நிலை உயரும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**: குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**: பூர்வீகச் சொத்து சம்பந்தபட்ட வகையில் நன்மையுண்டு, ரோக பயமுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள்.

**தனுசு**: குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், எந்தயும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்**: நண்பர்களால் வளர்ச்சி கூடும், நினைத்த காரியம் நிறைவேறும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்**: கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், மறைமுக போட்டிகள் மாறும், நம்பிக்கைகள் நடைபெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்**: தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி ஏற்படும் நாள்.

**உடைவதை [illegible] பாராட்டுக்குரியது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டில் ஈடுபடும் நபர் தொடர்பான காணொளி வெளியீடு

## தகவல் வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகளில் திருட்டில் ஈடுபட்டு வரும் சந்தேக நபர் தொடர்பிலான காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. விபரம் தெரிந்தால் தெரியப்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

தென்மராட்சி பகுதிகளில் அண்மைக்காலமாக வீட்டில் உள்ளவர்கள் வெளியில் செல்லும் நேரங்களில் வீடுகளுக்குள் புகுந்து திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், நேற்றுமுன்தினம் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள வீடொன்றில் ஆட்கள் இல்லாத வேளை புகுந்த நபர் ஒருவர் வீட்டில் இருந்த பெருந்தொகை பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளமை.

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராக்களில் பதிவாகியுள்ளது. வீட்டினுள் நுழையும் போது ஒரு சேர்டும், திருடிய பின்னர் வீட்டில் இருந்து வெளியேறும் போது வேறு ஒரு சேட்டும் அணிந்து திருட்டுச் சந்தேகநபர் தப்பி சென்றமை பதிவாகியுள்ளது.

குறித்த நபர் தொடர்பிலான விபரங்கள் அறிந்தவர்கள், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-6-33)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- எழிலினி தவராசா, வயலின்- கே. வேலதீபன், மிருதங்கம்- ஸ்ரீ.கோகுலராம், கடம்- சே.சிவஜெனன், முகர்சிங்- அ.மோகன் பிரசாத்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15- 8.05 மணிவரை இடம் பெறவுள்ள இசையரங்கில் பாட்டு- நவரத்தினம் பரந்தாமன், வயலின்-இ.நிரோஜன், மிருதங்கம்-வ.ரமணசர்மா, கஞ்சிரா- ர.லயசர்மா, முகர்சிங்-கௌ. அரோகன்ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# கையில் தீச்சட்டியுடன் நீதிகோரிய உறவுகள்!

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தினமான நேற்று வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு-கிழக்கு தழுவிய போரட்டம் ஒன்று இடம்பெற்றது**




நாட்டில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறும், தமக்குரிய நீதியை நிலைநாட்டுமாறும் கோரி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஆரிய குளம் சந்தியில் நேற்று காலை 11 மணியளவில் ஆரம்பமான பேரணி பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி ஊடாக முனியப்பர் கோவிலடியை அடைந்தது. பேரணியின் போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தீச்சட்டி ஏந்திச் சென்றதுடன், பேரணியின் முடிவில், அக்கினி சாட்சியாக தமக்கான நீதி கிடைக்கும் வரையில் போராட்டங்களை தொடர்வோம் என உறுதி எடுத்தனர்.

ஓஎம்பி ஒரு ஏமாற்று நாடகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை, சர்வதேச நீதி மற்றும் பொறுப்புக் கூறலை நாங்கள் கோருகிறோம் உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் ஈகைச் சுடரினை ஏற்றியும் நீதி கோரிய கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். பேரணியில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (நி-6-33-315-316)

பவளவிழா வாழ்த்துக்கள்

ஆற்றங்கரை வேலன் அருளால்
ஆன்மீகத்தொண்டுகள் பல ஆற்றி
பாரினில் அழியா புகழுடன் திகழும் சீலனாய்
வேலவன் அருள் வேண்டி வரும் பக்தர்களுக்கு
பசிப் பிணிபோக்கி அருளும் உத்தமனாய்
மதபேத மின்றி அறப் பணிதனை
முன்னின்று நடாத்தும் முதலவனாய்
மகாதேவ ஆச்சிரம குருநாதன் சொற்படி
அறங்காவலனாய் விளங்கும் ஆசான்
இன்று பவளவிழா காணும் நாயகன்
கலாநிதி.
மோகனதாஸ் சுவாமிகள்
பல்லாண்டு, பல்லாண்டு, வளமுடன் வாழ்க.
அன்பே சிவம்.
(1804)



அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள் மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி.

# நல்லையம் பதியில் மாம்பழத் திருவிழா



(யாழ்ப்பாணம்)


வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் 22ஆம் திருவிழாவான நேற்று வெள்ளிக்கிழமை காலை தெண்டாயுதபாணி உற்சவம் (மாம்பழத் திருவிழா) சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்த மண்டபப் பூஜையை தொடர்ந்து பிள்ளையாரும் முருகப் பெருமானும் வெளிவீதியுலா வந்து பக்தி பூர்வமாக மாம்பழத் திருவிழா நடைபெற்றது.

இதன்போது அடியார்களுக்கு நல்லூர் முருகன் தெண்டாயுத பாணி வடிவத்தில் காட்சியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு



மலர்வு
01 . 12 . 1949

உதிர்வு
28 . 07 . 2024

## அமரர். பழனிப்பிள்ளை சிவன்செயல்

(ராசா - கந்தரோடை)

(ராஜன் ஒலி, ஒளி, சமுத்திர மஹால், Euro power lanka Pvt LTD-உரிமையாளர்)

**இடம் : சமுத்திர மஹால், மருதனார்மடம்**

**திகதி : 01.09.2024** (நாளை ஞாயிற்றுக்கிழமை)

**நேரம் : முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை**

எனது தந்தையின் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அவரின் நண்பர்கள், அவரிடம் தொழில் பழகியவர்கள், அவரை அறிந்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

சமுத்திர மஹால்,
மருதனார்மடம்.

தகவல்:
மகன்- 077 652 9583

(1814)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## லெபனானை விட்டு வெளியேறுமாறு குடிமக்களுக்கு பிரிட்டன் அவசர எச்சரிக்கை




(லண்டன்)

லெபனானில் வசிக்கும் தங்களது குடிமக்கள் விரைவில் அந்நாட்டை விட்டு வெளியேற பிரிட்டன் அரசு எச்சரித்துள்ளது. லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே போர்ப்பதற்றம் தீவிரம் அடைந்துள்ளதை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது.


"ஏவுகணை மற்றும் வான் வழித்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. மோதல் தொடர்பாக பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் விரைவில் இந்த நிலை மோசமடையக்கூடும். அயல் நாட்டு அலுவலக தூதரக குழுக்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

ஆனால் இந்த மோதல் தீவிரமானால் நாங்கள் அனைவரையும் உடனடியாக வெளியேற்ற முடியாமல் போகும் இக்கட்டான சூழல் உருவாகலாம். அந்த சமயத்தில் அரசு சார்பில் நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது."

நிலைமை மோசமானால், மக்கள் பாதுகாப்பு முகாம்களுக்கு செல்ல வலியுறுத்தப்படலாம். இதனால் லெபனானில் உள்ள பிரிட்டன் குடிமக்கள் அங்கிருந்து வெளியேறிவிடுங்கள் என்பதே என் எளிமையான தகவல் என்று பிரிட்டன் வெளியுறவுத் துறை செயலாளர் டேவிட் லேமி தெரிவித்தார். (நி-6)

## தாயிடம் செல்லாமல் கடத்தல்காரனை கட்டிப்பிடித்து அழுத குழந்தை

### ஜெய்ப்பூரில் பாசப்போராட்டம்



(டில்லி)


குடும்பப் பிரச்சினை காரணமாக தனது உறவினர் ஒருவரின் குழந்தையை பொலிஸ் அதிகாரி ஒருவர் கடத்தியுள்ளார். 14 மாதங்களாக அவருடன் வளர்ந்த குழந்தையை மீட்டு தாயிடம் கொண்டு சேர்க்கும்போது தாயிடம் செல்ல மறுத்து கடத்தியவரை விட்டு பிரிய மனமில்லாமல் 2 வயது குழந்தை அழுத சம்பவம் சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவை சேர்ந்த தலைமை பொலிஸ் அதிகாரி தனுஜ் சாஹர். சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ள இவர், கடந்த 2023, ஜூன் 14ஆம் திகதி குடும்பப் பிரச்சினை காரணமாக ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள தனது உறவினர் ஒருவரின் பிருத்வி என்ற 11 மாத குழந்தையை கடத்திச் சென்றுள்ளார்.

இதுபற்றி வழக்குப்பதிவு செய்த பொலிஸார் தனுஜை தொடர்ந்து தேடி வந்துள்ளனர். ஆனால், தனுஜ், நீண்ட முடி, தாடியுடன் தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டு உத்தர பிரதேச மாநிலம் மதுராவில் உள்ள யமுனை ஆற்றங்கரையில் குடிசை அமைத்து துறவி போல வாழ்ந்து வந்துள்ளார்.

மற்றவர்களிடம் பிருத்வியை தனது மகன் எனக் கூறிவந்துள்ளார். சுமார் 14 மாதங்களுக்கு பிறகு அவரது இருப்பிடத்தை அறிந்த பொலிஸார், தனுஜை கைது செய்து குழந்தையை மீட்டனர். குழந்தையை அவரது தாயிடம் ஒப்படைக்கும்போது அவருடன் செல்ல மறுத்து பிருத்வி அடம்பிடித்துள்ளான். இதனைப்பார்த்து குற்றவாளி தனுஜும் அழ, பொலிஸார் ஆச்சரியமாகப் பார்த்தனர். பின்னர், இவர்களின் "பாசப் போராட்டத்தை" விலக்கி விட்டு, தனுஜை கைது செய்ததுடன் தாயிடம் பிருத்வியை ஒப்படைத்தனர். (நி-6)

## இஸ்லாமாபாத்தில் பிராந்திய மாநாடு மோடிக்கு அழைப்பு விடுத்த பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத் நகரில் வருகிற ஒக்டோபர் மாதம் நடைபெற இருக்கும் ஷாங்காய் ஒத்துழைப்புக் கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் மோடிக்கு அதிகார பூர்வ முறையில் அழைப்பு விடுக்கப்பட் டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உறுப்பு நாட்டு தலைவர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு இருப்பதாக பாகிஸ்தான் நாட்டின் வெளியுறவுத் துறை அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் மும்தாஸ் சாரா பாலோக் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பதை பல நாடுகள் ஏற்கனவே உறுதிப்படுத்தி விட்டன.

எந்தெந்த நாடுகள் கலந்து கொள்கின்றன என்பது பற்றிய தகவல்கள் விரைவில் தெரிவிக்கப்படும், என்று அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## அமெரிக்காவின் எதிர்காலத்திற்கான போராட்டம் ஆரம்பம்

### கமலா ஹாரிஸ் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

ஜனாதிபதித் தேர்தல் என்பது அமெரிக்காவின் எதிர்காலத் திற்கான போராட்டம் என கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.

ஜோர்ஜியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே கமலா ஹாரிஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். அதே போல் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார்.

தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தற்போது இரு வேட்பாளர்களும் தீவிர பிரசார பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இந்தத் தேர்தலில் நாம் கடுமையான பணிகளைச் செய்ய வேண்டியுள்ளதுடன் கடுமையான போராட்டங்கள் தனக்குப் பழக்கப்பட்டவை என்றும் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் வழக்கறிஞராக இருந்தபோது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் வன் கொடுமைகளை எதிர்த்து போராடியிருக்கிறேன் என்றும் அந்த போராட்டங்கள் எதுவும் எளிதாக இருந்ததில்லை.

அதேபோல் தேர்தல் போராட்டமும் எளிதானது அல்ல. இது அமெரிக்காவின் எதிர்காலத்திற்கான போராட்டம் என கமலா ஹாரிஸ் மேலும் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்ற முடி
கட்டான
ம். அந்த
சார்பில்
உத்தர
டியாது.”
மாசமா
துகாப்பு
ல வலியு
ிதனால்
உள்ள
ள் அங்
விடுங்கள்
மையான
ிரிட்டன்
ற செய
மி தெரி
(நி-6)

நாடு
தான்



் தொடர்
பாலோக்

ரேந்திர
அனுப்ப
லாசனை
தை பல
ிப்படுத்தி

கலந்து
பற்றிய
தெரிவிக்கப்
தெரிவித்
(நி-6)

பழக்கப்
கமலா
ள்ளார்.
றிஞராக
பெண்கள்
களுக்கு
ன் கொடு
போராடியி
ம் அந்த
வும் எளி
.
தேர்தல்
ிதானது
க்காவின்
போராட்
ஹாரிஸ்
. (நி-6)

# 3 நாட்கள் போர்நிறுத்தம்!

# இஸ்ரேல்- ஹமாஸ் சம்மதம்!

(காசா)

**இஸ்ரேலும் ஹமாஸும் காசா பகுதியின் பல்வேறு பகுதிகளில் 3 நாட்கள் போரை இடைநிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.**






ஆயிரக்கணக்கான குழந்தைகள் போலியோ சொட்டு மருந்து பெறாமல் அவதிக்குள்ளாகிய நிலையில் அவர்களுக்குப் போலியோ சொட்டு மருந்து கொடுக்கவில்லை என்றால் ஆபத்து என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்து இருந்தது.

இந்நிலையில் இஸ்ரேலும் ஹமாஸும் காசா பகுதியின் பல்வேறு பகுதிகளில் 3 நாட்கள் போரை இடைநிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளதாகவும் இதனால் போலியோவுக்கு எதிரான முதல் சுற்று தடுப்பூசியை வழங்க உள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதற்கான பிரசார நடவடிக்கைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போர் இடைநிறுத்தங்கள் காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை (உள்ளூர் நேரம்) நடைபெறும் என திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 10 லட்சம் எண்ணெய் பரல்களுடன் செங்கடலில் மூழ்கும் கப்பல்



செங்கடலில் சென்ற சரக்குக் கப்பல் ஒன்றின் மீது சிறிய வகை ஆயுதும் மற்றும் ட்ரோன் படகு மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் கப்பலில் லேசான காயம் ஏற்பட்டுள்ளது.

கப்பலில் இருந்த ஊழியர்களை பிரான்ஸ் படைகள் காப்பாற்றினர். இதனால் கப்பல் கைவிடப்பட்டது. செங்கடலில் தனியாக நின்ற கப்ப லில் ஹமாஸ் அமைப்பினர் இறங்கு துப்பாக்கியால் சுட்டு சேதப்படுத்தினர்.

மேலும் கச்சா எண்ணெய் பரல்கள் இருக்கும் டேங்கர்களை குண்டு வைத்து தாக்கினர். சுமார் ஆறு இடங் களில் குண்டு வைத்து தகர்த்தனர்.

இது தொடர்பான வீடியோவை ஹமாஸ் அமைப்பினர் வெளியிட்டுள்ளனர். அந்த கப்பலில் 10 லட்சம் கச்சா எண்ணெய் பேரல்கள் இருக்கிறது. இந்த எண்ணெய் உடன் கப்பல் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் செங்கடலில் கச்சா எண்ணெய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## கிரீஸில் கரையொதுங்கிய ஆயிரக்கணக்கான மீன்கள்



(கிரீஸ்)


மத்திய கிரீஸில் உள்ள வோலோஸ் துறைமுகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 100தொன்களுக்கும் அதிகமான இறந்த மீன்கள் கரையொதுங்கியுள்ளன.

இறந்த நன்னீர் மீன்கள் ஏதென்ஸுக்கு வடக்கே 320 கிலோமீற்றர் தொலைவில் உள்ள விரிகுடாவை அண்மித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வோலோஸின் சேம்பர் ஆஃப் காமர்ஸின் கூற்றுப்படி கடந்த மூன்று நாட்களில் ஏராளமான மீன்கள் கரையொதுங்கியுள்ளதாகவும் இதனால் மீன் பிடி நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மீன்களை அப்புறப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(நி-6)

## அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை நாட்டுக்கு அர்ப்பணித்தார் ராஜ்நாத்சிங்



(டில்லி)

இந்திய கடற்படையில் தற்போது 17 நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன. இதில் 16 நீர்மூழ்கி கப்பல்கள் டீசல் மற்றும் மின்சாரத்தில் இயங்கக் கூடியது. இவற்றில் 6 ரஷ்யாவின் கிலோ வகையைச் சேர்ந்தது. 4 ஜேர்மனியின் எச்டிடபிள்யூ ரகத்தை கொண்டது. 6 பிரான்ஸ் நாட்டின் ஸ்கார் பீன் ரகத்தைச் சேர்ந்தவை.

கடந்த 2018ஆம் ஆண்டு கடற்படையில் சேர்க்கப்பட்ட ஐ.என்.எஸ். அரிஹந்த் என்ற நீர்மூழ்கி கப்பல் மட்டும் அணுசக்தியில் இயங்கக் கூடியது. இதில் 83 மெகா வாட் திறனுள்ள அணு உலை உள்ளது. இது அணு ஏவுகணைகளை ஏவும் திறனுடையது. இவை எஸ்.எஸ்.பி.என். என அழைக்கப்படுகிறது.

இதேபோன்ற, இரணடாவது அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் 6,000 தொன் எடையில் ஐ.என்.எஸ். அரிகாட் என்ற பெயரில் விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கப்பட்டது. 750 கிலோமீற்றர் தூரம் தாக்கும் கே-15 ஏவுகணையை கொண்டது. இதன் பரிசோதனைகள் அனைத்தும் முடிவடைந்தது.

இந்நிலையில், விசாகப்பட்டினத்தில் இந்தியாவின் இரண்டாவது அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை பாதுகாப்புத் துறை மந்திரி ராஜ்நாத்சிங் நேற்று முன்தினம் நாட்டுக்கு அர்ப்பணித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளுக்கு நீதி வேண்டி யாழ். பல்கலையில் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்திற்கு முன்னால் நேற்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி வாய்களை கறுப்புத் துணியால் கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள், ஊழியர் சங்கத்தினர் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.(நி-6-33)

## "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்"

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்வச காலத்தை முன்னிட்டு "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் இரத்த தான முகாம் சப்பறம், தேர், தீர்த்தம்,பூங்காவனம் ஆகிய உற்வசங்கள் அன்று யாழ். மாநகர சபை, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இன்று பி.ப 4 மணி-6 மணி வரையும் நாளை மு.ப 8 மணி- பி.ப 8 மணி வரையும், நாளை மறுதினம் மு.ப 8 மணி முதல் பி.ப 8 மணி வரையும் செவ்வாய்க் கிழமை பி.ப 4 மணி -8 மணி வரையும் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது. எனவே குருதிக் கொடையாளர்களை குறித்த முகாமில் கலந்து கொண்டு குருதித்தானம் செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களை சந்தித்தார் அஜித் டோவால்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோரை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.(நி-6)

# அரசியல்வாதிகளின் படங்களை அகற்றுமாறு அதிரடியாக உத்தரவிட்ட ஆணைக்குழு

(கொழும்பு)

தேர்தல் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அந்த அந்த அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்களின் படங்களை அகற்றுமாறு பொலிஸாருக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறான படங்களை காட்சிப்படுத்துவதன் மூலம் தேவையற்ற சர்ச்சைகள் உருவாகுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான விபரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி மாவட்டச் செயலகங்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகங்களில் அஞ்சல் மூல வாக்குகளைச் செலுத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-6)

# ஜனவரி முதல் சம்பள உயர்வு

## கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு



(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் குறைந்த பட்ச வேதனம் ரூ.55.000 ஆக உயர்த்தப்படுமெனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தயாரித்துள்ள பாதீட்டுக்கு அமையத் தேவையான ஏற்பாடுகளை வழங்கும் முறைகளின் ஊடாக ஆசிரியர்களின் வேதனத்தினை அதிகரிக்கவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# சுற்றுலாத் துறையின் வளர்ச்சி நாட்டிற்கு மிக அவசியமானது



ராஜாராம் புருஷோத்தமகுரு

உலகில் மிகமுக்கியமான தொழில்களுள் சுற்றுலா மற்றும் பொழுது போக்குத் துறை ஒன்றாகும். ஒரு நாட்டின் பொருளாதாரம் சரிந்து விழுவதும் அரசியல் அமைப்பில் ஸ்திரத்தன்மை இல்லாதிருப்பதும் ஒரு சுற்றுலாத் தலத்திற்கு மிக முக்கியமான அச்சுறுத்தல்களாக இருக்கும்.

இலங்கை சுற்றுலாத்துறையை பிரதா னமாக நம்பியிருக்கும் ஒரு நாடாகும். நாட்டில் சிறிய விடுதிகளில் ஆரம்பித்து ஐந்து நட்சத்திர விடுதிகள் என நாட்டில் 2600 இற்கு அண்ணளவான விடுதிகள் 40000 அறைகளுடன் இயங்கும் ஓர் முக்கிய துறையாக உள்ளது. இத்துறையில் நேரடியாக ஐந்து லட்சத்திற்கு மேற்பட்டவர்களும் மறைமுகமாக பத்து லட்சத்திற்கு மேற்பட்டவர்களும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இது நாட்டின் வேலைவாய்ப்பில் 12 வீதம் பங்களிப்பை வழங்குகிறது.

பெருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றும் இத் துறை, 2024 ஆம் ஆண்டின் முதல் 6 மாத காலப்பகுதியில் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருவாயாக ஈட்டித் தந்துள்ளது. இந் நாடு ஓர் மீள்ச்சியை நோக்கி நகர இத் துறையின் பங்களிப்பு இன்றியமை யாத ஒன்றாகும்.

ஒரு நாட்டின் பொருளாதார அரசி யல் ஸ்திரமின்மைகள் சுற்றுலாத் துறையை சுக்கு நூறாக உடைக்க வல் லன. இலங்கையில் 2021-22 காலப் பகுதியில் நிலவிய நெருக்கடி நிலை மைகளால் சுற்றுலாத்துறை எதிர் கொண்ட சவால்கள் ஏராளம்

நீண்டநேர மின்தடை, இடையறாத மின்தடை WiFi உடன் இணைக்க முடியாத நிலை, சுற்றுலாப் பயணிகள் தங்கள் உறவினர்களைத் தொடர்பு கொள்ள, வங்கிக்கணக்கு மற்றும் விமானப் பதிவுகளை அணுக இடையூறாக அமைந்தது. மின்தடைகள் அவர்களது தனிப்பட்ட பாதுகாப்பிற்கு நேரடி அச்சுறுத்தலாக மாறியது.

குறைந்த அல்லது நிலைத்தன்மையற்ற எரிபொருள் விநியோகம் சுற்றுலாப் பயணிகளின் நோக்கத்துக்கு கடும் சவாலாக அமைந்தது. சுற்றுலாத் தலங்களுக்கிடையில் பயணப்படுவதே சிரமமான காரியமாக இருந்தது. இதை எந்த சுற்றுலாப் பயணிகளும்விரும்புவதில்லை.

அந்நியச் செலவாணிக்கான பற்றாக் குறையால் ஏற்பட்ட இறக்குமதி மட்டுப்படுத்தல்களால் ஹோட்டல்களில், சுப்பர் மார்க்கெட்டுகளில் மற்றும் சில்லறைக் கடைகளில் உணவுப் பொருட்களுக்கான பற்றாக்குறை ஏற்பட்டது. சுற்றுலா பயணிகளிடையே இயல்பாக நிலவும் வேறுபட்ட உணவுகளை பரீட்சித்துப் பார்க்கும் நாட்டம் இதனால் சவாலாகிப் போனது.

எல்லா இறக்குமதிகளும் தடை செய்யப்பட்டதால் நட்சத்திர வகை ஹோட்டல்களுக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியது. அதன் பராமரிப்புகள் மிகவும் சிக்கலான ஒரு நிலையை எட்டியது. குளியல் குளங்கள் மற்றும் ஓடும் நீரின் குளோரைன் இறக்குமதி தடை செய்யப் பட்டதால் ஆரோக்கியப் பிரச்சினைகள் உருவானது.

உள்நாட்டு சமையல் எரிவாயுவின் குறைந்த அளவான விநியோகம் அல்லது முழுமையான பற்றாக்குறை சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை மூடுவதற்கு வழிவகுத்தது. (தெரு உணவுக் கடைகள், மொபைல் பேக்கரிகள் போன்றவை).பாதுகாப்பற்ற போக்குவரத்து நடைமுறைகள் மோசடிகளைத் தூண்டியது, குறிப்பாக நிதி மோசடிகள். சென்னையில் இருந்து கொழும்பு வர விமானத்துக்கு 37,000 ரூபாய் மாத்திரம் செலவிட்ட நண்பரொருவர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வர ஒரு லட்சம் ரூபாய் செலவிட்டதாக ஆதங்கப்பட்டமை இன்னும் கண் முன்னே வந்து செல்கிறது.

தொழிற் துறையில் பல தகுதி வாய்ந்த தொழிலாளர்கள் நாடு விட்டுத் சென்றனர்). இது சுற்றுலாத்துறை மட்டுமன்றி எல்லாத்துறைகளையும் வலுவிழக்கச் செய்தது.

உள்ளூர் வங்கித் துறை சரிந்து விழுமோ என்ற பயமும், வெளிநாட்டு வங்கிகள் LC களை ஏற்க மறுத்ததும், அவசியமான உதிரிப்பாகங்கள் இறக்குமதியில் பிரச்சினையை உருவாக்கியது. இதனால் பராமரிப்புப் பணிகள் மிகவும் சிக்கலடைந்தன.

சுகாதாரத் துறை சரிந்து விழுதலும் பொது மற்றும் தனிப்பட்ட போக்குவரத்து, மருந்துகள் மருத்துவ உபகரணங்களின் குறைந்த அளவி லான விநியோகம் சுற்றுலாத் துறைக்கு இன்னொரு நேரடித் தாக் கத்தை ஏற்படுத்தியது.இன்று நிலைமை மாற்றம் கண் டுள்ளது. நாட்டின் பொருளாதார கட்ட மைப்பில் ஏற்படுத்தப்பட்ட உறுதிப் பாடுகள் சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்பியுள்ளன. இதனால் இன்று நாட்டை மீட்கும் பங்களிப்பில் சுற்றுலாத் துறை பிரதான இடம் பெறுகிறது. இதன் எழுச்சி பொருளாதார மீள் எழுச்சிக்கான திறவுகோல் என்பது வெளிப்படை. இந்த மாற்றம் ஒன்றும் தானாக நிகழவில்லை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளும். தன்னலமற்ற துணிச்சலான முடிவுகளுமே இம் மாற்றங்களை நிகழ்த்திக்காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சில்ப அபிமானி"

(யாழ்ப்பாணம்)

கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபடும் கைப்பணியாளர்களை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைகள் பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும் "சில்ப அபிமானி" 2024-தேசிய கைப்பணிப் போட்டி மற்றும் ஜனாதிபதி விருது வழங்கும் விழா "crafting ceylon-2024" ஏற்றுமதி சார்ந்த உற்பத்திகள் அபிவிருத்தி வேலைத் திட்டம் போட்டி மற்றும் கண்காட்சி இவ்வருடமும் ஒக்டோபர் 18, 19, 20 ஆகிய திகதிகளில் BMICH இல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு இணையாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கைப்பணியாளர்கள் பங்கேற்கும் விற்பனைச்சந்தையும் நடைபெறவுள்ளதுடன் வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்ட வடிவமைப்பாளர்களுக்கான 'crafting ceylon' ஏற்றுமதி சார்ந்த உற்பத்திகள் அபிவிருத்தி வேலைத்திட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கான மாகாணமட்டப் போட்டிகள் வட மாகாணத் தொழிற்துறை திணைக்களத்தினால் செப்ரெம்பர் மாதம் 27, 28 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

மேலும் போட்டியில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள கைப்பணியாளர்கள் விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்வதுடன் போட்டிக்கு சமர்ப்பிக்கவுள்ள ஆக்கங்களை செப்ரெம்பர் 24 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள எமது திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு வடக்கு மாகாணத் தொழிற் துறை திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)



சாவகச்சேரி பெரியமாவடிப் பகுதியல அமைந்துள்ள சித்திவிநாயகர் கலை மன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வுகள் அண்மையில் கலைமன்ற முன்றலில் இடம்பெற்றிருந்தது. (படம்: சுபேசன்)

## மதுபானசாலையை அகற்றக்கோரி மன்னாரில் மக்கள் கவனயீர்ப்பு

**(மன்னார்)**

**மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டை பகுதியில் புதிதாக திறக்கப்பட உள்ள மது விற்பனை நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்றுக் காலை மாவட்டச் செயலகத்திற்கு முன் பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

தற்போது மன்னார்-தலை மன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டை பகுதியில் புதிய மது விற்பனை நிலையம் திறக்கப்பட உள்ள நிலையில் அதனைச் சுற்றி மக்களின் குடியிருப்புகள் அமைந்துள்ளது.

காமன்ஸ், இளைஞர் படையணி முகாம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உட்பட மக்களின் செயற்பாடுகள் அதிகரித்த இடமாக குறித்த பகுதி காணப்படுகிறது.


குறித்தபகுதியில் இருந்து மதுவிற்பனை நிலையம்



அகற்றப்படாது விட்டால் மாவட்டம் தழுவிய ரீதியில் ஒரு சில தினங் களில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தமது கோரிக்கை அடங்கிய மகஜரினை அரசாங்க அதிபருக்கு கையளிக்கும் வகையில் மாவட்டச் செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (நி-6-285)

## பவள விழாக் காணும் சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள்



முருகப்பெருமான் விரும்பி உறைந்த சாந்நித்யம் நிறைந்த பகுதிகளில் ஒன்றாக விளங்குவது ஈழத்தின் வடபால் அமைந்துள்ள தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயமாகும். ஆடம்பரங்களின்றி அமைதியான சூழலில் அமர்ந்து அருளாட்சி புரியும் பதியாக இவ்வாலயம் விளங்குகிறது.

சித்தர்களும் ஞானிகளும் இப்பதியில் வாழ்ந்து சமாதி நிலை அடைந்துள்ளனர். இஞ்ஞானிகளின் அருளாட்சி அலை இப்பகுதியை ஆட்கொண்டுள்ளமையால் வரும் அடியார்களின் மனக் குறை, உடற்குறையாவும் பறந்தோடி அமைதியும் சாந்தியும் பெறுகின்றனர்.

அன்னதான மடங்கள் சூழ்ந்து காணப்படும் சந்நிதி முருகனை அன்னதானக் கந்தனென்றே போற்றிப் புகழ்ந்துரைப்பர். இவ்வாலயத்தைச் சூழ முன்னொருபொழுது 50 இற்கும் மேற்பட்ட அன்னதான மடங்கள் அமைந்து அன்னதானப் பணியை செவ்வனே நிறைவேற்றின.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக பல மடங்கள் தொடர்ந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் 1940 ஆம் ஆண்டில் ஸ்ரீ ரமண மகரிஷியின் ஆசிர்வாதத்துடன் மயில் வாகனம் சுவாமியால். ஆரம்பிக்கப்பட்ட ஆனந்த ஆச்சிரமம் அன்னதானப் பணியை குறைவின்றி நிறைவுறச் செய்து வந்தது. ஆயினும் 1985 ஆம் ஆண்டு மயில்வாகனம் சுவாமி அவர்கள் தேகம் விடும் வரை முருகன் இட்ட பணியை முறைப்படி நெறிப்படுத்தி வந்தார். அவரின் சீடனாக இளவயதில் இணைத்துக் கொண்டவரே மோகனதாஸ் சுவாமி ஆவார்.

### வாழ்கைப் பின்னணி

வல்லைப்பகுதியில் வாழ்ந்த மாரிமுத்து செந்திவேல் அவர்களுக்கும் மல்லிகாவுக்கும் மூத்த புதல்வனாக 31.08.1949 இல் மோகனதாஸ் இம் மண்ணில் உதித்தார். அவர் தனது கல்வியை யா/ வல்வை சிவகுரு வித்தியாலயத்திலும் பின்னர் திருகோணமலை இந்துக்கல்லூரியிலும் பின்னர் யா/சிதம்பராக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் இல்லற வாழ்வில் புகுந்து மக்கள் செல்வங்களையும் பெற்று நல்லறத்தை நடத்தி வந்த வேளையிலே சந்நிதியான் ஆச்சிரமத்தை உருவாக்கும் பணியைச் சந்நிதிவேலவன் பணித்திருந்தான்.

### சந்நிதியான் ஆச்சிரமமும் தோற்றமும் வளர்ச்சியும்

குருவின் பணியைத் தொடர வேண்டும் என்ற அவாவும் சந்நிதி வேற்பெருமானின் திருவருள் எண்ணமும் ஒன்றிணைந்து 1988ஆம் ஆண்டு பங்குனி உத்தர நன்நாளில் சந்நிதியான் ஆச்சிரமம் தற்காலிகமாக அரச மடத்தில் இயங்க ஆரம்பித்தது. இதற்கு சில அன்பர்களது அனுசரணையும் ஆதரவும் பக்கபலமாக அமைந்தது.

வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் சந்நிதி வேற்பெருமானின் திருவருட் கடாட்சத்தினால் உடுப்பிட்டியூர் பெருந்தகை காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை தங்கராசப்பத்தர் அவர்களினால் தற்போது சந்நிதியான் ஆச்சிரமம் இயங்கிவரும் காணியை தனது சொந்தச் செலவில் கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்தக் காணியில் மறைந்த முருகேசு சுவாமிகள் குகன் ஸ்ரூடியோ சு.நாகரத்தினம் மற்றும் ஆச்சிரமத்தின் பால் ஈடுபாடு கொண்ட அடியார்களினதும் முயற்சியினால் சந்நிதி வேலவனின் அருட்கடாட்சத்தினால் புதிய கட்டடத் திறப்பு விழா 05.05.1995இல் நடைபெற்றது.

ஆரம்பகால அன்னதானப் பணி மோகனதாஸ் சுவாமி அவர்களின் அயராத முயற்சியினால் துவிச்சக்கரவண்டியில் வன்னிப்பகுதி சென்று நெல்லைச் சேகரித்து அரிசியாக்கிக் கொண்டு வந்து வெள்ளி தோறும் அன்னதானப்பணியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இன்று குருவருளும் திருவருளும் நிறைந்து 365 நாட்களும் அன்ன தானப்பணி நடைபெற ஆச்சிரம வாசலிலேயே வேண்டிய பொருளும் பணமும் வந்து குவிய சந்நிதி வேற்பெருமான் அருள்பாலித்துள்ளான்.

இன்று அன்னதானப்பணி மட்டுமன்றி மாதம் தோறும் ஞானச்சுடர் என்ற சஞ்சிகை வெளியீடு, சமயப் பேருரைகள், இசைக் கச்சேரிகள் என்பவற்றுடன் ஈழ மணித்திருநாட்டின் சகல பாகங்களிலும் கல்விப்பணி, மருத்துவப்பணி, அனர்த்த நிவாரணப்பணி, சமூகப்பணி என இன்னோரன்ன பணிகளாக மிளிர்ந்து ஒவ்வொரு மாதமும் பல இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் தொடரப்பட்ட சந்நிதி வேலவனின் அருட்கடாட்சமும் மோகனதாஸ் சுவாமி அவர்களின் ஆளுமையுமே காரணமாகும்.

இவ்வகையில் மோகனதாஸ் சுவாமி அவர்களின் 75ஆவது வயது பூர்த்தியடையும் 31.08.2024 ஆகிய நாளில் அவர் உடல் ஆரோக்கியத்துடன் இன்னும் பல ஆண்டுகள் இம் மண்ணிலே வாழ வேண்டுமென சந்நிதி வேற்பெருமானின் பாதம் தொழுது பிரார்த்திப்போமாக.

ஆ.சிவநாதன்
(ஓய்வு நிலை அதிபர்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 570





இரண்டிலும் உண்மை உண்டு. ஆனால் நன்றாக வழி தெரிந்தவர்களாலே தான் இதற்குள்ளே வந்து விட்டு வெளியேற முடியும்! என்ன சொல்கிறீர்? என் ஆட்களை அழைத்துக் கொண்டு போய்விடச் சொல்லட்டுமா? அல்லது நீரே வழி கண்டு பிடித்து"

"இல்லை, தேவி! வழி கண்டுபிடித்துச் செல்ல எனக்கு நேரம் இல்லை. என்னை அழைத்து வந்தவர்களே திரும்ப அழைத்துச் செல்லட்டும். ஆனால் நான் போவதற்கு முன்னால் என்னைத் தாங்கள் அழைத்து வரும்படி சொன்ன காரணம் வேறொன்றும் இல்லையா? நான் தங்களுக்குச் செய்யக் கூடிய உதவி வேறொன்றும் இல்லையா? அப்படி ஏதாவது இருந்தால், சொல்லுங்கள்!"

"நல்லது நீர் கேட்கிறபடியால் சொல்கிறேன். பறக்கும் குதிரை ஒன்று எனக்கு வேண்டும். உம்மால் முடிந்தால் சம்பாதித்து வந்து கொடுக்கலாம்." "என்ன? பறக்கும் குதிரை என்றா சொன்னீர்கள்" ஆம் பறக்கும் குதிரை தான்!

பறப்பதுபோல் அதிகவேகமாய் ஓடக்கூடிய அரபு நாட்டுக் குதிரையைச் சொல்கிறீர்களா? இல்லை இல்லை! என்னால் அத்தகைய குதிரை மேல் ஏறவே முடியாது. பூமியில் கால் வைத்து ஓடும் குதிரையை நான் சொல்லவில்லை. பறவைகளைப்போல் இறகுகளை விரித்து வானத்தில் பறந்து செல்லும் குதிரையைச் சொல்கிறேன். அம்மாதிரி அதிசயக் குதிரைகள் இந்தப் பூவுலகில் எங்கேயோ இருப்பதாகக் கதைகளில் கேட்டிருக்கிறேன். அத்தகைய இறகுள்ள பறக்கும் குதிரைதான் எனக்கு வேண்டும்!"

"எதற்காக? சொர்க்க லோகத்துக்குப் பறந்து போவதற்காகவா?" என்னைப் பார்த்தால் சொர்க்கத்துக்குப் போகக் கூடியவளாகத் தோன்றுகிறதா? அத்தகைய புண்ணியம் செய்தவள் அல்ல நான். கொடிய பாவங்கள் பல செய்தவள்.

சொர்க்கத்தில் உள்ளவர்கள் புண்ணியம் மட்டுந்தானா செய்கிறார்கள் அங்கேயும் பாவங்கள் செய்கிறார்கள். அதற்குப் பரிகாரம் தேடப் பூவுலகத்துக்கு வருகிறார்கள். வந்த காரியம் ஆனதும் சொர்க்கத்துக்குப் போகிறார்கள்.

இல்லை எனக்குச் சொர்க்கத்துக்குப் போக விருப்பம் இல்லை. பாண்டிய நாட்டில் ஒரு பாலைவனம் இருக்கிறது. அதன் நடுவில் சில மொட்டைப் பாறைகள் இருக்கின்றன. புல், பூண்டு முளைக்காத பாறைகள். அவற்றில் சில முழைகள் இருக்கின்றன. ஒரு காலத்தில் அந்த முழைகளில் திகம்பர ஜைனர்கள் இருந்து தவம் செய்தார்கள். இப்போது பாம்புகளும் நரிகளும் அவற்றில் வசிக்கின்றன. தேவலோகத்து அமராவதி நகரைக் காட்டிலும் அந்தப் பாண்டிய நாட்டுப் பாலைவனப் பாறைகளே எனக்கு அதிகம் பிடித்தமானவை. தேவி! தங்களுடைய ஆசை அதிசயமானதுதான்.

பறக்கும் குதிரை கிடைத்தால் நான் அந்தப் பாலைவனத்துக்குப் போவேன். பிறகு அங்கிருந்து இலங்கைத் தீவுக்குப் பறந்து செல்வேன். இலங்கையில் வானை முட்டும் மலைகளும், அம்மலைகளை மறைக்கும்படி உயர்ந்த மரங்கள் அடர்ந்த காடுகளும் இருக்கின்றனவாம்.

இந்தச் சோழ நாட்டில் காணப்படும் எருமை மந்தைகளைப் போல் இலங்கைக் காடுகளில் யானை மந்தைகள் திரியுமாம். அவற்றையெல்லாம் பார்ப்பேன். இன்னும் இந்தப் பூவுலகத்தின் மத்தியில் உலகம் தோன்றின நாள் தொட்டுப் பனிக்கட்டியால் மூடப்பட்ட சிகரங்களையுடைய மலைகள் இருக்கின்றனவாம். சூரியன் உதயமாகும் சமயத்தில் அவை வெள்ளி மலைகளைப் போல் ஜொலிக்கும்.

பறக்கும் குதிரை மேல் ஏறிச் சென்று அம்மலைச் சிகரங்களைப் பார்க்க விரும்புகிறேன். இன்னும் அப்பால் பாண்டிய நாட்டுப் பாலைவனத்தைப் போல பதினாயிரம் மடங்கு விஸ்தாரமான பாலைவனங்கள் ஒரே வெண்மணல் காடாக இருக்குமாம். பகல் வேளையில் அங்கே எரியும் தீயின் மத்தியில் இருப்பது போலவே தோன்றுமாம்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## நன்றி இல்லாதவன்

இளவரசன் ஒருவன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான்.

ஒரு மானைத் துரத்திக் கொண்டு வெகு தொலைவு சென்று விட்டான். அவனுக்குத் துணையாக வந்த காவலர்களைப் பிரிய நேர்ந்தது.

இருள் சூழ்ந்தது. அப்போது ஒரு சிங்கம் எதிரே வருவதைக் கண்டு அருகில் இருந்த மரத்தின் மீது ஏறிப் பதுங்கிக் கொண்டான். அதே சமயம், அந்த மரத்தில் கரடி ஒன்று இருப்பதைக் கண்டு பயந்து நடுங்கினான்.

சிங்கத்திடமிருந்து தப்பி கரடிக்குப் பலியாகப் போகிறேமே என்று கவலையில் ஆழ்ந்தான் இளவரசன். கரடி அவனுக்கு ஆறுதல் அளித்தது.

நள்ளிரவு ஆகியது. மரத்தடியில் இருந்த சிங்கம் நகரவே இல்லை எப்படியும் இரை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காத்துக் கொண்டிருந்தது.

இளவரசன் சோர்வுற்று, தூக்கக் கலக்கத்தில் காணப்பட்டான்.

கரடி அவனைப் பார்த்து, "இளவரசனே! இருவரும் விழித்திருக்க வேண்டியதில்லை முதலில் நீ தூங்கு நீ கீழே விழுந்து விடாமல் உன்னை நான் பிடித்துக் கொண்டு விழித்திருக்கிறேன். பிறகு, நான் தூங்குகிறேன் நான் விழுந்து விடாமல் நீ பிடித்துக் கொள் பொழுது விடிந்ததும் சிங்கம் போய் விடும் நாமும் அவரவர் வழியில் போகலாம் என்று கூறியது.

அது கூறிய யோசனைப்படி இளவரசன் தூங்க முற்பட்டான். அப்போது சிங்கம் தன்னுடைய நயவஞ்சகத்தைக் காட்ட முனைந்தது.

"அன்புள்ள கரடியே! நாம் இருவரும் ஒரே இனம்! அவனோ நம் விரோதி அவனை நீ காப்பாற்றலாமா? நான் போன பின், அவன் அம்பெய்து உன்னைக் கொன்று விடுவானே.

மனித இனம் நன்றி பாராட்டாதது, எனவே அவனைக் கீழே தள்ளிவிடு, என் பசியைத் தீர்த்துக் கொண்டு போகிறேன், உனக்கும் பயம் அகன்று விடும் என்று தேனொழுகக் கூறியது சிங்கம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான அன்பு என்பது எவ்வித செயற்கைத் தனமும் கலக்கப்படாத நூறு சதவீதம் தூய நிலை.
- யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் ஆட்சித் தலைவனை நல்லூரில் கண்டு தரிசித்தேன்

*ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீமான் மகா ராஜாதிராஜ, ராஜ கம்பீர ராஜ நாகார்ச்சித, ராஜாலங்கார, குமார ராஜ குலதிலக, ஈரேழு பதின்னான்கு லோகத்தின் அதிபதி. நாடாளும் நாயகன், அழகன், குழகன், ஆனந்த ஜித்தன், நல்லூர்ப்பதி காவலன், நல்லூர் அடியார் காதலன், அரண் அண்டசராசர ப்ரபஞ்சோத் பத்திநிமித்த காரணன், வேதத்தின் நாயகன், வேள்வியின் தாயவன், முறை ஆகமப் பொருளவன், முத்தமிழ் ஆனவன், நல்லூர் கந்தசாமியார் பரியேறி வாரார்.*

என்ற கட்டியம் கம்பீரமாக ஒலிக்கிறது. எங்கள் ஆட்சித் தலைவன் நல்லூர்க் கந்தப் பெருமான் தன் அரண்மனையில் இருந்து வள்ளி, தெய்வயானை சகிதம் ஏழு குதிரை களில் புறப்படுகின்றான்.

அடியார்தமைக் காத்தருளும் பொருட்டு அவன் வீதி உலா வந்தபோது மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துப் போனோம்.

ஓ! எங்களுக்கா ஆட்சித் தலைவன் இல்லை. யார் சொல்லியது? அதோ! நல்லூர்க் கந்தசாமியார் படையணி சகிதம் பரியேறி வருகிறார்.

இம்மையிலும் மறுமையிலும் எங்களைக் காத்தருளும் நல்லூர் வேற்பெருமான் எம் வல்வினை அறுத்துப் பேரின்பப் பெருவாழ்வு தர வருகின்றான்.

அத்தலைவனை ஒருமுறையேனும் கண்ணால் கண்டு கரம் கூப்பி வணங்கி விட்டால், அதுவே பிறவிப் பயனை அடைந்த பேறாகும் என்ற வேணவாவில், அலை மோதும் அடியார் கூட்டம். என்னே! அற்புதம்.

பொதுவில் நாட்டுத் தலைவர்கள் வெளி நாடுகளுக்கு விஜயம் செய்கின்ற வழமை உண்டு.

ஆனால், எங்கள் ஆட்சித் தலைவனைக் காண்பதற்காக வெளிநாட்டவர்கள் அங்கிருந்து இங்கு நல்லூர்ப் பதிக்கு வந்து, அதிசயத்து நிற்கின்ற அந்தக் காட்சி நல்லூரில் வீற்றிருக்கும் நம் ஆட்சித் தலைவன் நமக்கு மட்டுமல்ல, உலகம் முழுமையிலும் உய்தி வேண்டுவார்க்கும் அவனே ஈடேற்ற வல்ல தலைவன் என்பது உறுதியாகிறது.

அதிலும் நம் தலைவன் வருகின்ற திரு வீதியை, தம் உடலால் அங்கப் பிரதட்சணம் செய்து ஐயனே! வருக. உன் திருவீதியை எங்கள் உடலால் செம்மை செய்துள்ளோம்.

நல்லூரில் வீற்றிருக்கும் மன்னர் பெருமானே! நீவிர் வீதி உலா வந்து பேரருள் தந்தருளும் என்பதாக வைகறைப் பொழுதில் நல்லூர்த் திருவீதியில் நடக்கின்ற அங்கப் பிரதசட்ணம் அமைகிறது.

அதிலும் இம்முறை எங்கள் ஆட்சித் தலைவன் பரியேறி வந்தபோது, வீதி எங்கனும் நம் இளைஞர்கள் வேட்டி அணிந்து சால்வை தரித்து பண்பாட்டு அணியாய் நின்ற காட்சி கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தது. எங்கள் ஒட்டு மொத்த இளைஞர்களும் இதே பண்பாட்டை நிச்சயம் பேணுவார்கள்.

அவர்களை நம் ஆட்சித் தலைவன் நல்லூர் வேற்பெருமான் வழிப்படுத்தி, அவர்களுக்கு சிறப்பான – உன்னதமான வாழ்வைக் கொடுப்பான் என்ற உண்மை உறுதியாயிற்று.

# ஐ.எம்.எப் உடன்படிக்கையில் கைவைத்த மறுகணமே நாடு ஆபத்தில் சிக்க நேரிடும்

## நிதி இராஜாங்க அமைச்சர் கடும் எச்சரிக்கை

எதிர்க்கட்சி வேட்பாளர்கள் கூறுவதைப் போல சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை மறுசீரமைத் தால் அத்தருணமே நாடு ஆபத்தில் சிக்க நேரிடும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் பிணைமுறிப் பத்திரதாரர்களுடன்செய்து கொண்ட இணக்கப்பாடுகளை இழந்து நாடு மீண்டும் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்குள் செல்லும் அபாயம் உள்ளது.

உழைக்கும் போது செலுத்தப்படும் வரியை திருத்தியமைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் அது தொடர்பான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் வரிகள் குறைக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனமான "ஐந்தாண்டு திட்டம் - இயலும் ஸ்ரீலங்கா" இன்று(நேற்று முன் தினம்) வெளியிடப்பட்டது. பொருளாதார நெருக்கடியால் அதல பாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை மீட்டு, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய நாடாக மாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. வேறு யாரும் சவாலை ஏற்க விரும்பவில்லை. மேலும் அந்த சவாலை ஏற்கும் திறன் அவர்களிடம் இருக்கவும் இல்லை.

நாம் கட்டியெழுப்பிய பொருளாதார ஸ்திரத் தன்மையை முன்னோக்கிக் கொண்டு செல்வதை ஐந்தாண்டுத் திட்டம் - இயலும் ஸ்ரீலங்கா தேர்தல் விஞ்ஞாபனம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து, கிடைக்கும் பயன்களை அதிகரிக்க வேண்டுமா? என்பதை செப்ரெம்பர் 21ஆம் திகதி மக்கள் தீர்மானிப்பர்.

இந்த நேரத்தில், இந் நாட்டின் மிக முக்கியமான விடயம் பொருளாதாரம் ஆகும். பல தரப்பினரும் பொருளாதாரம் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்தாலும், அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் இயலுமை பற்றிய புரிதல் இல்லை என்றே தோன்றுகிறது. நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளா தாரத்தை மீண்டும் கட் டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட நாம் இரண்டு வருடங்களில் கடுமையாக உழைத்தோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நல்லூரில் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நல்லூர் ஆலய முன் வீதியில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தலும், மக்களுக்கான நேரடி பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த புதன், வியாழக்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்டப் பிரசார பணிகளில் பல்வேறு தமிழ் சிவில் சமூக அமைப்புகளில் இயங்கும் செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

மக்கள் பலரும் ஆர்வமுடன் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் துண்டுப்பிர சுரங்களையும் வாங்கிச் சென்றனர். (ம-7)

## குளவி கொட்டியதில் 100 மாணவர்கள் காயம்

தெனியாய பட்டிகல பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

சுமார் 100 பேர் வரை குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் ஊருபொக்க பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 70 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் 7 மாணவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக எம்பிலிப்பிட்டிய பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-7)

## துபாய் அனுப்புவதாக பணமோசடி செய்தவர் கைது

வெளிநாட்டில்வேலை வாங்கித் தருவதாகக் கூறி பண மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 28 ஆம் திகதி ருவன்வெல்ல பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ருவல் வெல்லநகரில்சட்ட விரோத வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனமொன்றை நடாத்தி வந்த நிலையில் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது துபாய் இராச்சியத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 50 இலட்சத்துக்கும் அதிகமான ரூபாவை சந்தேக நபர் மோசடி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர் இதற்கு முன்னர் மினுவாங்கொடைப் பிரதேசத்தில் வேலை வாய்ப்பு முகவர் நிலையமொன்றை நடாத்தி பண மோசடி செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டதாகப் பணியகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரை ருவான்வெல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர், அவரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார். (ம-7)

## சுற்றுலாவிகளின் வருகை இம் மாதம் அதிகரிப்பு

மாதத்தின் முதல் 25 நாட்களில் 143,622 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 27,999 ஆகும்.

இந்நிலையில், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 15,918 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 10,068 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 9,162 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 1,341,681 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (ம-7)

## குருநாகலில் லொறி மோதியதில் பெண் ஒருவர் உயிரிழப்பு

(குருநாகல்)

குருநாகல், அலவ்வ - நாரம்மல வீதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாரம்மலவிலிருந்து அலவ்வ நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது படுகாயமடைந்த வயோதிபப் பெண் அலவ்வ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல், அலவ்வ பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

02

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**சமஷ்டி முறையிலுள்ள சிறப்பியல்பு வாய்ந்த பண்புகள்**

சமஷ்டி முறைகளில் உறுதியான. அரசியல் மற்றும் அரசியலமைப்பு ரீதியான பண்புகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

• சமஷ்டி அரசொன்று ஒப்பீட்டளவில் சுதந்திரமான பல அரசியல் அலகுகள் இணைவதன் மூலமே உருவாகின்றன. இவை பொது நோக்கமொன்றை நிறைவேற்றிக்? கொள்ளும் பொருட்டே இணைகின்றன.

• சமஷ்டி முறையிலுள்ள இரட்டை ஆட்சி முறையொன்றே உள்ளது. அதாவது, ஆட்சிமுறை இரண்டு மட்டங்களிலேயே நிலவுகின்றது. அதாவது மத்திய அரசு மற்றும் பிராந்திய அரசுகள் என்றவாறாகும்.

• மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையில் தெளிவான அதிகாரப் பகுப்பொன்று உள்ளது. அந்த அதிகாரப் பகுப்பானது அரசியலமைப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு நடைபெறும். மத்திய அரசுக்கு முழுநாட்டிற்கும் ஏற்புடையதான அதிகாரங்கள் உள்ளன. பிராந்திய அரசுகளுக்கு. அவற்றின் நில எல்லைகளுக்கு மட்டும் ஏற்புடையதான அதிகாரங்களே உள்ளன.

• மத்திய அரசு மற்றும் பிராந்திய அரசுகள் ஆகிய இரு "தரப்பும் தமது அதிகாரத்தையும் ஆளுகையையும் ஒரு மூலத்திலிருந்தே பெற்றுக் கொள்கின்றன. அதாவது, அரசியலமைப்பிலிருந்தாகும். சமஷ்டி முறையில் அரசியலமைப்பு ஒப்புயர்வற்றதாகக் கருதப்படுவது இதனாலாகும்.

• சமஷ்டி அரசியலமைப்பு ஒப்பீட்டளவில் இசைந்து கொடுக்காது என்பதோடு பிராந்திய அரசுகளின் விருப்பைப் பெறாது அரசியலமைப்பைத் திருத்துகின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு கிடையாது. இதற்கான காரணம் யாதெனில், மத்திய அரசுக்கு தான்தோன்றித்தனமாக பிராந்திய அரசுகளின் அதிகாரங்களையும் உரிமைகளையும் பறித்தெடுப்பதற்கு வாய்ப்பு அளிக்காதிருத்தலாகும்.

• சமஷ்டி ஆட்சி முறை நிலவுகின்ற நாடுகளில் பிரசைகள் மீது தமது ஆளுகை அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு மத்திய அரசாலும் அதேபோன்று பிராந்திய அரசுகளாலும் முடியுமாயுள்ளன. ஆயினும், இது அரசியலமைப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள துறைகளுக்கு ஏற்பவேயாகும். உதாரணமாக, அமெரிக்காவில் வாழுகின்ற ஒருவர் இரண்டு சட்ட முறைகளுக்கும் ஒரே தடவையில் கட்டுப்படுகின்றார். அதாவது அமெரிக்காவின் ஐக்கிய குடியரசின் சமஷ்டிக் குற்றவியல் சட்டம் மற்றும் பிராந்திய அரச குற்றவியல் சட்டம் ஆகியவற்றுக்காகும்.

• சமஷ்டி முறைகளில் மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் வெவ்வேறான அரசியலமைப்புகள் இருக்கலாம். அமெரிக்கா இதற்கானதொரு உதாரணமாகும். அங்கு ஒவ்வொரு பிராந்திய அரசுக்கும் தனியான அரசியலமைப்பு உள்ளது. ஆயினும் அவை, மத்திய சமஷ்டி அரசியலமைப்பின்? கோட்பாடுகளுக்கு இணங்கியதாய்? இருத்தல் வேண்டும். பிராந்திய அரசியலமைப்புக்கள் சமஷ்டி அரசியலமைப்புடன் முரண்படுவதாயிருப்பின் சமஷ்டி அரசியலமைப்பே மேலோங்கி நிற்கும்.

அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 'Supremacy Clause' என அழைக்கப்படுகின்ற வாசகத்தில் இக் கருத்தே அடங்கியுள்ளது. இதன் மூலம் கூறப்படுவது யாதெனில், ஒவ்வொரு பிராந்திய அரசும் சமஷ்டி அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்பது மாத்திரமன்றி, அது நாட்டின் "ஒப்புயர்வற்ற சட்டமாதல்" வேண்டும் என்பதே.

சமஷ்டி அரசியலமைப்புக்கும் பிராந்திய அரசியலமைப்புகளுக்கும் இடையே முரண்பாடொன்று ஏற்படுகின்றவிடத்து சமஷ்டி அரசியலமைப்பே மேலோங்கி நிற்கும்.

• சமஷ்டி முறையினுள் மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கின்ற நிறுவனமொன்று உள்ளது. பொதுவாக இந் நிறுவனம் நாட்டின் உயர்நீதிமன்றமாயிருக்கும். ஒரு சில. நாடுகளில் இதற்கென விசேடமாக அரசியலமைப்பு நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**சமஷ்டி முறைகள் உருவாவதற்கான வழிகள்**

இரண்டு வழிகளினூடாக உலகில் சமஷ்டி ஆட்சி முறைகள் உருவாகியுள்ளன. அவையாவன:-

(i) சுதந்திரமான ஒரு சில அரசியல் கூறுகள் பொது நோக்கமொன்றுக்காக இணைதல்.

(ii) சமஷ்டியல்லாத அரசினுள் குறிப்பிட்ட அரசியல் காரணங்களுக்காக, அப்போதுள்ள பிராந்தியங்களால் அமைந்த சமஷ்டி முறையொன்று உருவாக்கப்படுதல்.

சுவிற்லாந்தும் ஐக்கிய அமெரிக்காவும் முதலாவது முறையின் கீழ் சமஷ்டி அரசுகளாக மாறியமைக்கான உதாரணங்களாகும். சுவிற்சலாந்து தனது பாதுகாப்பை முன்னிட்டு, பல சிறிய அரசுகள் ஒன்றாக இணைந்ததன் மூலம் சமஷ்டி அரசாக மாறியது.

ஒவ்வொன்றும் சுதந்திரமாக இருந்த பதின்மூன்று இராஜ்யங்கள் ஒன்றிணைந்ததன் மூலமே ஐக்கிய அமெரிக்கா உருவாகியது.

இவை ஆரம்பத்தில் கூட்டாட்சி அரசாக ஒன்றிணைந்து பின்னர் சமஷ்டி அரசொன்றை உருவாக்கின. இம்முறைக்கு ஏற்ப சமஷ்டி அரசொன்று உருவாகின்ற போது. அவ்வாறு ஒன்றிணைகின்ற கூறுகளின் ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தை வைத்திருப்பதைப் போன்றே மத்திய சமஷ்டி அரசுகளின் பொது நோக்கமொன்றை வெளிப்படுத்துகின்ற அடிப்படை அதிகார முறைமையை ஒப்படைத்தலும் நடைபெறுகின்றது.

இது அரசியலமைப்பின் மூலம் சட்டரீதியாக வெளிப்படுத்தப்படுகின்ற இணக்கப்பாட்டின் ஊடாகவே நடைபெறுகின்றது.

அரசியலமைப்பானது அவ்வாறு ஒன்றிணைகின்ற அலகுகளையும் மத்திய அரசையும் உருவாக்குகின்றதும் அவற்றை ஒன்றுடனொன்று இணைக்கின்றதும், அவற்றின் அதிகாரங்களை ஒதுக்கீடு செய்கின்றதும் மற்றும் ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தை உருவாக்குகின்றதுமான அடிப்படைச் சட்ட ஆவணமாகும்.

இரண்டாவது முறையின்படி சமஷ்டி அரசாக அமைவதற்கான உதாரணம் கனடா. தென்ஆபிரிக்கா, மற்றும் இந்தியாவாகும். இங்கு. அப்போதுள்ள நிர்வாக மாகாணங்கள் சமஷ்டிப் பிராந்தியங்களாக மாற்றப்படுதலே நடைபெற்றுள்ளது.

இது அப்போதுள்ள அரசியலமைப்பு திருத்தப்படுவதன் மூலமே நடைபெறுகின்றது. இன்றேல் புதியதொரு அரசியலமைப்பின் மூலமேயாகும். மத்திய அரசுக்குரிய அதிகாரங்களில் முக்கியமானதொரு பகுதியை புதிதாக உருவாக்கப்படுகின்ற பிராந்திய அரசுகளுக்கு ஒப்படைத்தல் இந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமே நடைபெறுகின்றது.

சமஷ்டி ஆட்சிமுறை, ஒற்றை ஆட்சி முறையில் இருந்து வித்தியாசப்படுகின்றதைக் குறிப்பிடுவதன் மூலம் மாத்திரம் எம்மால் நின்று விடமுடியாது ஏனென்றால், சமஷ்டி முறையிலும் பல்வேறு மாதிரிகள் உள்ளதனாலாகும். சமஷ்டி ஆட்சி முறை விரிந்ததொரு வீச்செல்லையினுள் பல்வேறு வடிவங்களைப் பெறலாம்.

உதாரணமாக இந்தியாவிலுள்ள சமஷ்டி முறையில் மத்திய அரசுக்குக் கூடுதலான அதிகாரங்கள் கிடைக்கக்கூடிய முறையொன்றே உள்ளது. இதனை "மத்தியவாத சமஷ்டி முறை" என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கிடையே, அமெரிக்கா, கனடா, ஜேர்மன். அவுஸ்திரேலியா போன்ற சமஷ்டி முறைகளின் பிராந்திய அரசுகளுக்கு இந்தியாவின் பிராந்திய அரசுகளை விடக் கூடுதலான சுதந்திரம் உள்ளது. பாகிஸ்தானிலும் மத்திய அரசின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்ட பிராந்திய அரசுகளுள்ள சமஷ்டி முறையொன்றே உள்ளது.

சமஷ்டி வீச்செல்லையினுள் உள்ள மேலுமொரு விடயம் யாதெனில் கூறுகளின் அளவும் இயல்புமாகும். கனடா, ஜேர்மன், அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற சமஷ்டி அரசுகளில் புவியியல் ரீதியில் பாரிய பிராந்திய அலகுகளே உள்ளன. சுவிற்சலாந்திலுள்ள சமஷ்டி முறையினுள் மிகச் சிறிய அலகுகளே உள்ளன. இவற்றைக் கன்டன் என அழைக்கிறோம்.

**ஒற்றை ஆட்சி முறை மற்றும் சமஷ்டி முறை ஒப்பீடு**

ஒற்றை ஆட்சி முறை
சமஷ்டி முறை

1. ஆட்சி அதிகாரம் தனியொரு மத்திய அரசின் மூலமே அமுலாக்கப்படுகின்றது. ஆட்சி அதிகாரம் மத்திய அரசினாலும் பிராந்திய அரசுகளினாலும் அமுலாக்கப்படுகின்றது.

2. பிராந்தியக் கூறுகள் தொடர்பான மத்திய அரசின் அதிகாரம் அரசியலமைப்பு ரீதியாக மட்டுப்படுத்தப்பட்டது. மத்திய அரசின் அதிகாரம். பிராந்திய அரசுகளின் அதிகாரமுள்ள துறைகள் மீது செலுத்தப்படமாட்டாது.

3. மத்திய சட்டமன்றத்திற்கு சட்டங்களை ஆக்குகின்ற தனியுரிமை உண்டு. சட்டவாக்க அதிகாரம் மத்திய சட்டமன்றத்திற்கும் பிராந்திய சட்டமன்றங்களுக்குமிடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூலர் ரக...

டுள்ளார்.

வவுனியா - மன்னார் வீதியில், பூவரசங்குளம், குருக்கள்புதுக்குளம் பகுதியில் நேற்று மாலை இவ் விபத்து இடம்பெற்றது.

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி வந்த கூலர் ரக வாகனமும், வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் பூவரசங்குளம், குருக்கள் புதுக்குளம் பகுதியில் பயணித்தபோது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன், மற்றொரு இளைஞர் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரமனாத் சிவாகரன் (வயது-30) என்ற இளைஞரே மரணமடைந்தவராவார். செல்லத்துரை கிருஸ்ணபாலமன் (வயது-37) என்ற இளைஞரே காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துத் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,250)

## புதிய கல்வி...

பொலநறுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல அரசாங்கங்களை ஸ்தாபித்த நாட்டு மக்கள் தற்போது வெறுப்படைந்துள்ளனர்.

தேவையாயின் இந்த நாட்டைச் செல்வந்த நாடாக மாற்ற முடியும்.

இந்த வாழ்க்கை முறைமையைவிட புதிய வாழ்க்கை முறையையே மக்கள் விரும்புகின்றனர்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பில் இளைஞர்கள் நம்பிக்கையின்மையுடன் உள்ளனர்.

எந்தத் தருணத்தில் இந்த நாட்டை விட்டு வெளியேறுவோம் என்ற எண்ணத்தில் இளைஞர்கள் இருக்கிறார்கள்.

சகல வழிகளிலும் துன்பங்களையே மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## இந்திய பாது...

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டிருந்தார். (ம-7)

## அன்புக்...

செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்படலால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனை முன்னிட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"உலகளாவிய ரீதியில் யுத்தம், வன்முறைகள், அனர்த்தங்கள், மனிதாபிமான நெருக்கடிகள் மற்றும் புலம்பெயர்வு போன்ற பலவேறு காரணிகளால் தமது குடும்பத்தினரை, அன்புக்குரியவர்களை பிரிந்த சகலரையும் நாம் இன்றைய தினத்தில் (நேற்று) நினைவுகூருகின்றோம்.2023 ஆம் ஆண்டின் இறுதியில் உலகளாவிய ரீதியில் 2 இலட்சத்து 39 ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருக்கின்றனர் என்று செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச்சங்கக் கூட்டிணைவில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இருப்பினும் இந்த எண்ணிக்கை காணாமல் ஆக்கப்படல்களின் உண்மை நிலைவரத்தையும், தீவிரத்தன்மையையும் துல்லியமாகப் புலப்படுத்தவில்லை.

ஒவ்வொரு வலிந்து காணாமல் ஆக்கப்படல் சம்பவத்தின் பின்னாலும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என அறிந்துகொள்ள முடியாததனால் உறவுகளுக்கு ஏற்படும் அளவற்ற துயரம் மறைந்திருக்கின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், இத்தகையதோர் பிரச்சினை உண்டு என்பதை ஏற்றுக்கொள்வதும், அதற்குரிய தீர்வை வழங்குவதும் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாததாகும். மாறாக இப்போதும் தமது அன்புக்குரியவர்களைத் தேடிக் கொண்டிருக்கும் சகல சமூகத்தைச் சேர்ந்தவர்களினதும் துன்பியல் அனுபவங்களுக்குரிய அங்கீகாரத்தை வழங்க மறுப்பதானது அவர்கள் மத்தியில் அதீத கோபம் தூண்டப்படுவதற்கும், நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவு ஏற்படுவதற்குமே வழிகோலும்.

எனவே, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிடின், தனிநபர்களால் மாத்திரமன்றி ஒட்டுமொத்த சமூகத்தாலும் முன்நோக்கிப் பயணிக்க முடியாது.

இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள்.

அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதே வேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றுள்ளது. (ம-7)

## தமிழ்ப்...

உபதலைவரும் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான தம்பிராசா குருகுலராஜாவின் தலைமையில், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்களின் பங்கேற்போடு நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானம் நாளை நடைபெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ம-7)

## தமது...

கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பூகொடையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஊழல், மோசடி, களவு மற்றும் கையூட்டல் போன்ற அரசியல் கலாசாரங்களை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் மற்றும் பாதுகாக்கும் வகையிலான பொதுமக்கள் யுகம் விரைவில் ஏற்படுத்தப்படும்.

இதற்கான வேலைத்திட்டங்கள் பொதுமக்களின் வீடுகளுக்கே வந்து சேரும்.

தற்போதைய அரசாங்கத்திற்குக் கடவுச்சீட்டைக் கூட உரிய வகையில் விநியோகிக்க முடியவில்லை.

கடவுச்சீட்டுக்காக வரிசையில் காத்திருக்கும் யுகம் தற்போது ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2024.08.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5581

S 8 9 0 2 8 6

அத சம்பத — S 0 2 8 6 — சீட்டிழுப்பு இலக்கம் 156

### தன நிதானய

திகதி - 2024.08.30 — சீட்டிழுப்பு இலக்கம் - 1611

Z 02 30 33 47 Z

Double Chance 12948

### மெகா பவர்

திகதி 30/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1929

L 15 06 23 45 65

Double Chance 34662

### லக்கி 7 VIP

திகதி 2024.08.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0407

S 4 7 0 9 2 8 S

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3823 — சீட்டிழுப்பு திகதி 30.08.2024

N 15 54 60 68

N 75504

### HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 2024.08.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0890

கும்பம் 07 29 34 61 கும்பம்

86829 — 29

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வஸனா

30.08.2024 — வெற்றி வாரம் 289 — இள இளஞ்சிவப்பு

G 9 2 8 4 3 3

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,073,668.00

35648

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2555 — வர்ணம் இளஞ்சிவப்பு

சீட்டிழுப்பு திகதி 30.08.2024 — தினம் வெள்ளி

06 15 36 55 M

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,902,019.20

### சனிதா

திகதி 2024.08.30 — வெற்றி வாரம் 4716 — வர்ணம் செம்மஞ்சள்

03 17 22 66 Z

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,464,718.80

87483

### சசிரி

வெற்றி வாரம் 522 — சீட்டிழுப்பு திகதி 2024.08.30 — பச்சை

09 11 50

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,983,760/-

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4267 — வர்ணம் கரும் நீலம்

சீட்டிழுப்பு திகதி 2024.08.30 — தினம் வெள்ளிக்கிழமை

20 36 52 54 — மிதுனம்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,952,934.00

176559

### ஜயோதா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

H 40 04 20 21 60

1731 — 30.08.2024 — வெள்ளி

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 542,033,480.20

### அட கோட்டிபதி — ADA KOTIPATHI

வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் : 2381 — சீட்டிழுப்பு திகதி : 2024.08.30

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,924,580.80

03 43 54 57 Z

212390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு:

(216)

**075 033 6759**



## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்போது 9990/= ரூபாவிலிருந்து

யாழ்ப்பாணம் – சென்னை விமானப் பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644


இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (299)



## மின்சார கட்டணத்திலிருந்து விடுதலை

சீனா(China) மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் (Solar Lights) வீட்டுத் தெரு, முற்றம், தோட்டம் ஏனைய இடங்களிற்கும் பொருத்துவதற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

விலை 7000 ரூபாவிலிருந்து



"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க்.என்.கம்பனி



- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

N5 எலக்ரிக்கல்ஸ்

- 77, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 312 7895

Hotline : 071 535 7799/ 071 554 7973

(1825)




வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127


சிவமயம்

கந்தவனநாதன் துணை







## பவளவிழா வாழ்த்து

31.08.2024 சனிக்கிழமை இன்று பவளவிழாக் காணும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர்

### கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள்

அவர்கள் அழிபசிதீர்க்கும் உத்தமனாய் பாரில் இன மதபேதமின்றி அறப்பணிகளையும் சமூக சேவைகளையும் நலிவுற்றோரையும் வாழ வைக்கும் தெய்வமாக விளங்கும் சுவாமிகள் இன்று பவளவிழாக் காணும் நன்னாளில் ஆற்றங்கரை வேலனையும், பொலிகண்டி கந்தவனப்பதி ஷண்முகப் பெருமானையும், பொலிகண்டி மருதாம்புலம் பத்திரகாளி அம்பாளையும் பிரார்த்தித்து நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டுவது இன்ப அன்பு

சிவப்பிரம்மஸ்ரீ குமரகுருமணி
ச.வைத்தியநாதக் குருக்கள் (J.P) குடும்பம்
(பிரதமகுரு பொலிகண்டி
கந்தவனம் தேவஸ்தானம்,
மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி
அம்பாள் தேவஸ்தானம்)

கந்தவனக் கோவிலடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(1811)

## 75வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்

31.08.2024



### கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள்

இந்த சிறப்பான
நாளில் மட்டுமல்ல
வாழ்க்கை முழுவதும்
வளர்பிறை
சந்திரனைப் போல
வளமுடன்
நலமுடன் சந்நிதியான்
ஆசீர்ரோடு வாழ
வாழ்த்துகின்றோம்.

அன்புக்குரிய
செந்தில்குமரன் குடும்பம்

(C-1082)


## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

(289)

**074 17 37 684**



## வேலையாள் தேவை

புதிதாக ஆரம்பிக்கவுள்ள கடைக்கு கேக் செய்வதில் அனுபவமுள்ள ஆள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு :

(1792)

**077 654 8459**



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 240/= | Max5Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 269/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1 Kg றவை | - 282/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 205/= | |
| 1 Kg பொன்னி அரிசி | - 275/= | |
| 1 Kg கீரி சம்பா | - 240/= | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 760/= | |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3390/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= | ~~80/=~~ |
| 700 g சுபோஷ மா | - 560/= | ~~590/=~~ |

400g Anchor

1000/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(299)

Happy Supermarket
0777 8080 30



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 6 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் :
  (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1829)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 814 7389**

**077 986 5457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.